# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்**, இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 18 /ந/2025
நாள்:. 13.03.2025

திரு. S.H. முஹம்மது அன்சாரி,
காயல்பட்டணம், தூத்துக்குடி மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம். ... எதிர்மனுதாரர் காயல்பட்டணம்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சின்ன நெசவு தெரு, கதவு எண். 41/A2 என்ற முகவரியை சேர்ந்த திரு. S.H. முஹம்மது அன்சாரி என்பவரது 19.06.2023 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.06..2023 அன்று பெறப்பட்டு, 18/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சின்ன நெசவு தெரு, கதவு எண். 41/A2 என்ற முகவரியை சேர்ந்த திரு. S.H. முஹம்மது அன்சாரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“எனது சகோதரர்களுக்குள் குடும்ப இடத்தை தனித்தனியாக பிரிக்கும் போது எழுதிய பத்திர ஒப்பந்தத்தை மீறி திரு. செய்யது அஹமது மற்றும் திரு. கதிஜத்துல் குடிரா, வீட்டு எண். 40/A3 சின்ன நெசவு தெரு, காயல்பட்டணம் ஆகியோருக்கு இடத்தை விற்பனை செய்துள்ளார். இதன் காரணமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (திருச்செந்தூர்) வழக்கு எண்.87/2021 தாக்கல் செய்தேன்.

மின்சார வாரியத்தின் ஆவணம் மூலம் 05.07.2021–க்கு முன்பே குடியேறிய இவர்கள் வீட்டு ப்ளான்/தீர்வை எடுக்காமலேயே முறையற்ற வகையில் குடிநீரை பயன்படுத்தி வந்தார்கள். செப்டம்பர் 2022–ல் ப்ளான் அப்ரூவல் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார்கள். மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களிடம் முறையற்ற வகையில் குடிநீர் இணைப்பு குறித்து மனு செய்த பின்பே, ப்ளான் அப்ரூவல் விண்ணப்பம் செய்தார்கள். வழக்கு நடைபெறுவதால் ப்ளான் அப்ரூவல் நிறுத்த வேண்டி முறையீடு செய்ததால், ப்ளான் அப்ரூவல் நிறுத்தம் செய்துள்ளார்கள்.

முறையற்ற வகையில் குடிநீர் இணைப்பு பயன்படுத்துவதை ஆட்சியர் அலுவலகத்தில் பல மனுக்கள் கொடுத்த பின்பு 24.12.2022–ல் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2023–ல் ப்ளான் அப்ரூவல் கொடுக்கப்பட்டது போல் தெரிகிறது.

1) திருச்செந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது (வழக்கு எண். 87/2021)

2) பத்திர பதிவு தடங்கல் மனு 16.11.2021–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3) இடத்தை வாங்கியவர்கள் 31.10.2020 அன்று பத்திர பதிவு முடிக்கப்பட்டு வீடுகட்ட மின்சாரம் வேண்டி 10.11.2020 அன்று விண்ணப்பம் கொடுத்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

   05.07.2021 குடியிருப்பு மின்சாரமாக மாற்ற மனு செய்து 08.07.2021 குடியிருப்பு மின்சாரமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

4) 25.03.2022 அன்று எனது வக்கீல் மூலம் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரிடம் வழக்கு நடைபெற்று வருவதால் ப்ளான்/தீர்வை நிறுத்த வேண்டி மனு கொடுத்துள்ளேன்.

5) காயல்பட்டணம் நகராட்சியின் பொது தகவல் அலுவலர் அவர்கள் 27.05.2022 அன்று மேற்படி வீட்டிற்கு ப்ளான் கொடுக்கப்படவில்லை என்றும் 08.07.2022 அன்று தங்களுக்குள் வழக்கு முடிவுற்ற பின்னரே மேல் நடவடிக்கை தொடரப்படும் என்கிறார்கள்.

6) 08.09.2022 அன்று வழக்கு நிலுவையில் உள்ளதால் ப்ளான் அப்ரூவல் திரும்ப அனுப்பப்படுவதாக செய்யது அஹமதுக்கு நகராட்சி மூலம் பதில் அனுப்பப்படுகிறது.

7) 06.10.2022 அன்று காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் அவர்கள் வழக்கு முடிவுற்ற பின்பு ப்ளான் /தீர்வை வழங்கப்படும் என்கிறார்கள்.

8) பொது வழிப்பாதை ஐந்து அடி ஓடையை ஆக்கிரப்புசெய்து பால்கனியை கட்டி பொது பாதையில் வாசல் படியை இருபுறமும் போட்டது மட்டுமல்லாமல் காயல்பட்டணம் மின்சார வாரியத்தில் என்னுடைய மின்சார குடை கம்பி அவரது பால்கனியை உரசி செல்வதாக புகார் மனு கொடுத்தார்கள்.

   11.03.2023 அன்று மின்சார வாரியம் அண்மையில் கட்டிய தங்களது வீட்டை பொது ஓடையில் Extend செய்து கட்டி உள்ளதால் மின்கம்பி உங்களது பால்கனி அருகில் செல்வதாக கூறி உள்ளார்கள்.

9) இடத்தை வாங்கியவர்களின் வீட்டுத் தீர்வை எண்.139/015/900953 பிப்ரவரி 2023.

10) பொது வழிப்பாதையில் படியை எதிர்தாரர் போட்டதால் இருசக்கர வாகனம் எனது வீட்டு அருகே கொண்டு செல்ல முடியாமல் எனது மூத்த சகோதரர் வீட்டு அருகில் நிறுத்த வேண்டியது உள்ளது. இது குறித்தும் ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் மனு செய்துள்ளேன்.

11) திரு. செய்யது அஹமது என்பவரிடம் Rs. 20,000/– வாங்கி நான் குடிநீர் இணைப்பு கொடுத்ததாக நகராட்சி தலைவர் கூறியது எனக்கு மிகப்பெரிய மனஉளைச்சல் /மனவேதனை ஏற்படுத்தியது.

<u>கோரிக்கை</u>

1) வீட்டுப் ப்ளான் வீடு கட்டுவதற்கு முன்பே எடுக்க வேண்டியது எனவும் வீடு கட்டிய பின் ப்ளான் எடுக்க முடியாது என தெரிவித்த காயல்பட்டணம் நகராட்சி, வீடு கட்டி குடியேறி வருடம் கழித்து விண்ணப்பம் செய்த இவருக்கு ப்ளான் எந்த முறையில் வழங்கப்பட்டது என்ற விபரம்.

2) ப்ளான்/தீர்வை எடுக்காத எதிர்தாரர் குடிநீர் இணைப்பு பல புகார்களால் துண்டிக்க வேண்டிய சூழ்நிலையில் ப்ளான்/தீர்வை கொடுக்கப்பட்ட விபரம்.

3) முறையற்ற குடிநீரை துண்டித்த பின் அதன் மீது எடுத்த நடவடிக்கை.

4) பொதுவழிப்பாதை ஆக்கிரமிப்பு அகற்ற வேண்டியதற்கு ப்ளான்அப்ருவல் கொடுக்கப்பட்டு உள்ளதா என்ற விபரம்.

5) திரு. செய்யது அஹமது /கதிஜத்துல் குடிரா ப்ளான்/தீர்வை ரத்து செய்ய வேண்டுகிறேன்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

**2) மனுதாரரின் புகார் மனுவில் , மனுதாரரால் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (திருச்செந்தூர்) தொடரப்பட்ட வழக்கு எண்.87/2021 நிலுவையாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்நேர்வில், மாண்பமை திருச்செந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண்.87/2021 நிலுவையில் உள்ளதாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1962 or any matter pending before a Court.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.H. முஹம்மது அன்சாரி,
கதவு எண். 41/A2 ,
சின்ன நெசவு தெரு,
காயல்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்